[18th November 1963

திரு. கரு. சீமைச்சாமி : இந்த முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் அதிகமாகப் பணம் பெற்று வரும் மாவட்டம் எது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி என்னிடம் விவரங்கள் இல்லை.

சாத்தனூர் நீர்த்தேக்கம்

* 245 **கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் மேல் கதவுகள் (Shutters) அமைக்கப்பட்டுவிட்டனவா?

(இ) இந்த நீர்த்தேக்க ஆயக்கட்டின்கீழ் இன்னும் பல கிராமங்களைக் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The work is under progress.

(*b*) No.

Employees of erstwhile District Board Schools

* 246 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there is a difference in the mode of payment of salaries to the staff of the Government High Schools and the staff of the High Schools managed by erstwhile District Boards ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The staff in the Board High Schools are not treated as Government servants, while the staff employed in Government high schools are Government servants.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : ஸார், அரசாங்க பள்ளிக் கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாத ஆரம்பத்திலேயும், டிஸ்ட்ரிக் போர்ட்டின் கீழ் வேலைசெய்யும் பள்ளி ஆசிரியர்களுக்கு 20-ம் தேதிக்கு மேலும்தான் சம்பளம் கொடுக்கப்படுவதாக என்னிடம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது உண்மைதானா என்பதை கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் சொல்ல முடியாது. அரசாங்கம் நடத்துகிற பள்ளி ஆசிரியர்களுக்கு குறிப்பாக தலைமை ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாக பணம் அனுப்புகிறது. ஜில்லா போர்டில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அந்தந்த ஜில்லா ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் மூலமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனால் சிறிதளவு வித்தியாசம் இருக்கலாம்.